திறப்புவிழா
இன்று
நடைபெறுகிறது.
அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.
உடுப்பிஹொட்டல்
134, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
0196

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர் 20 ஆவணி 22 ஷவ்வா: 3 இதழ்: 208
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-9-78

நவீன வசதியுடன் கூடிய
உடுப்பிஹொட்டல்
திறக்கப்பட்டுள்ளது.
சுவைமிகு
ஃ புரியாணி
ஃ நூடில்ஸ் மற்றும்
உணவுவகைகளுக்கு
உடுப்பிஹொட்டல்
134, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
0196

# அமைச்சர் அவையில் தொண்டமான் சேர்ந்தார்

## பலத்த ஆரவாரத்துடன் சபையில் வரவேற்பு

(கொழும்பு)

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், மஸ்கெலியா - நுவரேலிய தொகுதியின் மூன்றுவது பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் நேற்றுக்காலை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலான அமைச்சரவையில் ஒரு அமைச்சராகப் பதவிஏற்றுக்கொண்டார்.**

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த வேருவலைத் தொகுதி இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.ஜி.சமரநாயக்கா நேற்று ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டார்.**

திரு. எஸ். தொண்டமான் நேற்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன முன்னிலையில் ஒரு அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்தார். இவருக்குக் கீழ்வரும் அமைச்சின் பிரிவுகள் பற்றி உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் ஒன்றில் இந்திய வம்சாவளியினர் ஒருவர்முழு அளவிலான அமைச்சர் பதவியொன்றை ஏற்றுக்கொள்வது இதுவே முதல் த்டவையாகும்.

தொண்டமான் நேற்று பாராளுமன்றத்தில் தமது நிலைபற்றிய அறிக்கைஒன்றை விடுத்தார்.

தோட்டத்தொழிலாளர்களாகிய இந்திய வம்சாவளியினரின் உரிமைப்போராட்டங்களை கடந்த 30 ஆண்டு காலமாக தாம் முன்னின்று நடத்திவருவதாகவும் நாடற்ற மக்களை பொறுத்தரையில் புதிய அரசியல்சட்டம் முன்னேற்றமானதாகவும் முற்போக்கானதாகவும் இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதற்தடவையாக நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏனைய மக்களோடு சமபங்காளிகளாகக் கலந்துகொள்ளும்சந்தப்பப் தோட்ட தொழிலாளர்களாகிய மக்களுக்கு கிடைத்திருக்கிறது என்றும் இந்த மக்களுக்கு இதுவரை காட்டப்பட்டுவந்த பாரபட்சமும் ஒதுக்கிவைக்கும் மனப்பான்மையும் நீங்குவதற்கு இதன்மூலம் வசதி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவந்துள்ளது. ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று காலையில் புதிய அரசியல் சட்டத்தைப் பிரகடனப்படுத்திவைப்பார்.

அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். புதிய சபாநாயகரையும் அவர்கள் தெரிவு செய்வார்கள்.

திரு. தொண்டமான் காலையில் ஜனதிபதி மாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டபின், பிற்பகல் சபை கூடியபொழுது அரசாங்கப் பகுதியின் வழியாக வந்து, அவருக்குரிய முன் ஆசனத்தில் அமர்ந்தார். சபாநாயகருக்கு பக்கமாக உள்ள இரண்டாவது ஆசனமாகும் இது. திரு. தொண்டமான் சபைக்குள் வந்தபொழுது பலத்த கரகோஷம் எழுந்தது. அச்சமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எவரும் இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் திரு. தருமலிங்கம், சூசைதாசன் ஆகியவர்கள் இருந்தனர். பின்னர் திரு. எம். சிவசிதப்பரம் வந்தார்.

வேருவலை இரண்டாவது உறுப்பினர் அரசாங்கத்தரப்புக்குப் போனதைத் தொடர்ந்து வேறு யாரும் இருக்கிறார்களாஎன்று சபாநாயகர் சிரிப்புக்கிடையில் கேட்டார். (ம)

## சுதந்திரக்கட்சி எம்: பி. அரசுடன் சேர்ந்தார்

(கொழும்பு)

**சிறிலங்காசுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்ஒருவர்நேற்றுஐக் கியதேசியக்கட்சி அரசுடன் சேர்ந்துகொண்டார்**

வேருவலை தொகுதியின் இரண்டாவது உறுப்பினரான திரு. ஆர். ஜி. சமரநாயக்காவே நேற்று அரசாங்கக் கட்சியில் சேர்ந்துகொண்டவராவார்.

1972ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்டத்தின் கீழ் பேரவையின் கடைசிக் கூட்டம் நடைபெற்ற நேற்றைய தினம் திரு. சமரநாயக்க அரசாங்கக் கட்சியில் சேர்ந்துகொண்டார்.

அவர் சபையில் நிகழ்த்திய சிறிய உரையின்போது புதிய அரசியல் சட்டம் மக்களின் இறைமையைப் பாதுகாத்து நீதித்துறைக்கு சுதந்திரம்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்-மாவட்டத்தில் இன்று முதல்

# ரயில்களிலும் நிலையத்திலும் இராணுவம் பாதுகாவல்

## பஸ்களில். பொலிஸ்பாதுகாப்பு; இரகசியப் பொலிசும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலும், புகையிரதங்களிலும் இராணுவத்தினர் இன்று முதல் பாதுகாவல் பணியை மேற்கொள்ளுவார்கள். இதேசமயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சேவையில் உள்ள சகல பஸ்களிலும் இரகசியப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவதுடன் சில பகுதிச் சேவைகளில் ஆயுதந்தாங்கிய பொலிஸாரும் கடமைபுரிவர்.

நேற்று முற்பகல், யாழ். அரசாங்கச் செயலகத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் இந்த ஏற்பாடுகள் பற்றிய முடிவுசெய்யப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோ கூட்டிய இந்த மகாநாட்டில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், படைக்குழு இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், இ. போ. ச., ரயில்வே, வங்கிகள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புதிய அரசியலமைப்பு அமுலுக்குக் கொண்டுவரப்படும் இன்றையதினத்தில் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்புநடவடிக்கைகள் குறித்து இம் மகாநாட்டில் ஆராயப்பட்டது.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி, நாட்டின் அமைதியைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோவும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் எடுத்துக்கூறினர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், புகையிரதப் பகுதியினர், வங்கி நிர்வாகத்தினர், தங்கள் பாதுகாப்புக்காகத் தாங்களே சகல ஏற்பாடுகளையும் செய்துகொள்வது அவசியமென்றும், அவர்களுக்கு உதவியளிப்பதற்குப் பொலிஸும், இராணுவமும்

(6ம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் சுட்டதில் ஒருவருக்கு காயம்!

## நெடுங்கேணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

டிராக்டர் ஒன்றின்மீது பொலிஸார் சுட்டதில் சாரதி படுகாயமடைந்தார் நெடுங்கேணியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்தது

நா. கந்தசாமி (வயது 28) என்பவரே பொலிஸாரின் றைபிள் சூட்டுக்கு இலக்கானவராவர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நெடுங்கேணியிலிருந்து 2 மைல் தொலைவிலுள்ள தட்டுவான்என்னுமிடத்திற்குடிராக்டர் ஒன்றில் சிலர் திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றுகொண்டிருக்கும்போது காட்டுப்பாதையில் தோன்றிய 2 பொலிஸார் டிராக்டரை மறித்திருக்கிறார்கள். வீதியின் கரையோரமாக டிராக்டர் நிறுத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸார் டிராக்டர் மீது றைபிளால் சுட்டார்களாம். அப்போது அதனைச் செலுத்திச் சென்றுகொண்டிருந்த சதிர்காமசாமியின் கால்மீது சூடுபட்டுள்ளது. பொலிஸாரின் திடீர்த் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்த சாரதி, டிராக்டரை மேலும் சிறிது தூரம் செலுத்திச்சென்று நிறுத்தியதாகவும் தொடர்ந்து அயலவர்களின் உதவியுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும், காயமடைந்தவர் பொலிஸாருக்கு அளித்த வாக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## வணக்கஸ்தலங்களில் ஆராதனை வழிபாடுகள்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டம் இன்று முதல் அமுலுக்கு வருவதனையொட்டி நாடெங்கிலுமுள்ள பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களில் காலை சமய அனுஷ்டானங்கள் மேற்கொள்ளப்படும்.

புதிய அரசியலமைப்பின் கீழ் நாட்டின் அபிவிருத்தியின்பால் ஏகோபித்த அர்ப்பணிப்பைக் குறிக்கும் தேசியப்பணி ஈடுபாட்டுத் திட்டம், தேசியக் கொடி ஏற்றிவைத்தல், தேசிய கீதம் இசைத்தல் என்னும் வைபவங்களைத் தொடர்ந்து பாடசாலை மாணவர் அனைவரும் ஒன்றுகூடி

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன ''கிறேப்ஸ்'' கன்றுகள் விற்பனைக்குண்டு. கிடைக்குமிடம் 'அண்ணுபாம்' ஸ்ரேசன் வீதி, இணுவில். 0253

### தேவை

அனுபவம் மிக்க டீசல் மெக்கானிக்கர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31 மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 0241

அனுபவம் மிக்க பெட்டி ஏற்றி இறக்கக் கூடிய சேல்ஸ்மன். அனுபவம் மிக்க கிளினர், பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய தொழிலாளர் ஆகியோர் உடன் தேவை. நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ் 31, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 0240

வைத்திய கலாநிதியொருவருக்கு வீடு அல்லது வீடு கட்டக்கூடிய காணி யாழ்ப்பாணம், இணுவில்மருதனுமடம், மல்லாகம் தெல்லிப்பளை நாவற்குழி அல்லது புத்தூர் ஆகிய இடங்களில் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0247.
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 0247

ஸ்ரான்லி வீதியிலுள்ள பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு (கரியேஸ்) தேவை. வேலை பழகும் பொழுது சம்பளம் கொடுக்கப்படும். உடனடியாக நேரில் வரவும். 0257

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்வதற்கு கிளாக், போமன், லிப்ற் வேலையாள், கழுவுதல், பழகுபவர்கள் நற்சாட்சிப் பத்திரத்துடன் 15-9-78-க்கு முன் தபால் மூலம் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும். பரஸ்கோ ஓப்பிறிக்கேசன் சேவிஸ், முத்திரைச்சந்தை நல்லூர், யாழ்ப்பாணம். 0265

யாழ். நகரில் ஆரம்பிக்கவுள்ள மருந்து தொழிற்சாலைக்கு ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு டாக்டர் எம். தேவமதுரம், 569 பீச்ரோட், குருநகர், யாழ்ப்பாணம். 0261

### சேவை

வருமானவரி, சொத்துவரி, நன்கொடைவரி, மூலதன ஆதாயவரி, விற்பனவுவரி, புதிய மாற்றங்கள். வரிச்சலுகைகள் பற்றிய கலந்துரையாடல். விபரங்களுக்கு, திருஞானஸ், யாழ்ப்பாணம். தொ.பே: 7081. 0243


## கலைவிழா ஒத்திவைப்பு

7-9-78-இல் நடைபெற இருந்த பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கலைவிழா 20-9-78 புதன்கிழமைக்குப் பின்போடப்பட்டுள்ளது.

அதிபர்

# கிளிநொச்சி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

(உருத்திரபுரம்)

விவசாயமக்களின் பழம்பெரும் ஆலயமான கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று காலை முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் பகல் 10 மணியளவில் கொடியோற்ற வைபவமும் வசந்த மண்டபபூசையும் நடைபெறும்.

காலையிலும் மாலையிலும் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் அடியார்கள் புடைசூழ வீதியுலா வருவார்.

தினமும் மாலையில் 7 மணி தொடக்கம் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா ''கந்தரனுபூதி'' என்னும் பொருள் பற்றிச்சமய விரிவுரை நிகழ்த்துவார்.

எதிர்வரும் 15-ந் திகதி இரதோற்சவம் நடைபெறும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இறுதிநாளான 17-ந் திகதி பூங்காவன உற்சவமும் நிகழும். (அ)

## ஜெயகரந்தன் இலங்கை வருகிறார்

(வெள்ளவத்தை)

தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும் திரைப்படத் தயாரிப்பாளருமான திரு. ஜெயகாந்தன் விரைவில் இலங்கை வரவிருக்கிறார்.

தமது படைப்புகள் மூலம் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ள திரு. ஜெயகாந்தன் இங்குள்ள கலை இலக்கிய நண்பர்களைச் சந்திக்க ஆர்வம் கொண்டுள்ளார். (உ)

## கலைவிழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிப்பெற்றோர் ஆசிரியர் சங்கம் இன்று வியாழக்கிழமை நடத்தவிருந்த கலைவிழா இம் மாதம் 20-ம் திகதிக்குப்பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கலந்துகொண்டு கல்லூரியின் புதிய கட்டிடத்தையும் திறந்து வைப்பார்.

ஆசிரியர் மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ)


உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

## விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் அரிசி, மாச் சாக்குகள் 8000-மும், மா பைகள் 342-ம், கழிவு சாக்கு 304-ம் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 18-9-78-க்கு முன்னர் ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 25-9-78 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் 'பொதுமுகாமையாளர்' உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை, என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
0260 வல்வெட்டித்துறை.


## வீடமைப்புக் கடனை அதிகரிக்க உத்தரவு

(கொழும்பு)

கட்டடப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக தேசிய வீடமைப்புக் கடன் தொகை மட்டும் 40,000 ரூபாவில் இருந்து 50,000 ரூபாவாக வழங்குமாறு பிரதம மந்திரியும், உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாஸ உத்தரவிட்டுள்ளார். வீடமைப்புக் கடன் திருப்பிச் செலுத்தும் காலமும் 20 முதல் 25 ஆண்டுகளாக்கப் பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு இலாகா மூலம் 1972 - 1976 கால எல்லையில் 3 கோடியே 45 லட்சம் ரூபாவை 20,126 பேருக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஊ-உ)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வலி கிழக்கு வட பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் நிரந்தர பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொதுமுகாமையாளர்
தரம் III ரூபா 340/- 10 10 20 340 540
ரூபா 590/-
15 10, 20 5

2. கடன் சந்தைப்படுத்தல் உற்பத்திமுகாமையாளர்
தரம் III ரூபா 300/- 12.50 10/15 5 300—500
ரூபா 500/-
12.50 10 15 5

வயது 23க்கும் 50க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது. குறைந்தளவு 2 வருடமாவது யாழ். மாவட்டத்திற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 21-9-78ந் திகதியன்றோ அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் விண்ணப்பப்பத்திரம் யாவையும் ரூபா 1/- தபால் கட்டளை மூலமோ, பணமாகவோ செலுத்தி, கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அன்றேல் நேரிலோ வந்து பெற்றுக்கொள்ளலாம். தபால்மூலம் பெறவேண்டின் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

தா. வேல்நம்பி
தலைவர்.

வலிகாமம் கிழக்கு வடபகுதி
பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்,
இராஜவீதி, அச்சுவேலி.
5-9-78. 0259


# பதவிநீக்கம் கேலிக்கிடம் என்கிறார் வவனியா சிவா

(யாழ்ப்பாணம்)

''கட்சி உறுப்புரிமையே அற்ற 35 பேர் ஓர் இடத்தில் கூடியதை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டம் என்று கூறுவது, கட்சியின் தலைவர், செயலாளரை நீக்கிவிட்டோம் என்று தீர்மானம் எடுப்பது, புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்வது அத்தனையும் கேலிக்கிடமான செயலாக அமைகின்றது.''

இவ்வாறுவவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

3-9-78 யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தையும், செயலாளர் ஆகிய என்னையும் பதவி நீக்கம் செய்துள்ளார்கள் என்ற தீர்மானத்தை 4-9-78 பத்திரிகையில் வாசித்தேன் வேறும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இச்செய்தியில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட கூட்டத்திற்கு திருவாளர்கள் தா. சங்கரப்பிள்ளை, எஸ். செல்வராஜா, ரி. பரமானந்தராசா கைச்சாத்திட்டு எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். 23-8-78 பதிவுத்தபால் மூலம் அழைப்பாளர்களில் ஒருவராகிய திரு. தா.சங்கரப்பிள்ளை குறித்த கூட்டம் கட்சியின் அமைப்பு விதிகளுக்கு முற்றிலும் முரணான வகையில் கூட்டப்படுகின்றதென் பதை சுட்டிக்காட்டி உரியமுறையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தைக்கூட்டவும், செயற்குழுமீளாய்வுசெய்யவும், இயக்கம் சம்பந்தப்பட்ட மற்றைய நடவடிக்கைகள் எடுக்கவும் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில்ஏற்ற நடவடிக்கைகள் விரைவில்எடுக்கப்படும் என்பதையும், குறித்த கூட்டங்கட்கு கட்சி அமைப்பின் படி தகுதியுள்ள உரிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் அறிவித்தல் கொடுக்கப்படும் என்பதையும் எனது பதிலில் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருந்தேன்.

தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் மறைவிற்குப் பின் திரு. தா. சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தின் பின் பல செயற்குழுக் கூட்டங்கள் முறையாகக் கூட்டப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கட்சியின் அமைப்பு விதிகளுக்கு இணங்க உறுப்புரிமையை இழந்த பலருக்கு குறித்த கூட்டங்களுக்கு சமுகம் கொடுக்கும் உரிமையே இல்லாது இருந்தார்கள். இவர்களில் மேற் குறிப்பிட்ட கூட்டத்தை சுய நலத்துக்காகக் கூட்டிய அழைப்பாளர்கள் மூவருமே கட்சியின் உறுப்புரிமையை இழந்தவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அமைப்பு விதிகளுக்கமைய முறையாக இயங்கி வருகின்றது. இதன் தலைவரையோ செயலாளரையோ பதவி நீக்கம் செய்யவோ அல்லது வேறு தீர்மானங்களை எடுக்கவோ சுயநலத்தையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு சிலருக்கு எந்த விதி உரிமையும் இல்லை. எமது கட்சி தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து கூட்டணியாக உருவெடுத்து இலங்கைவாழ் தமிழ்பேசும் இனத்திற்கு ஏற்ற தொண்டு செய்து வருகின்றது.

இக்குறிக்கோளை அமரர் தலைவர்ஜீ.ஜீ. பொன்னம்பலம் அங்கீகரித்துள்ளார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அங்கம் வகித்துள்ளார்கள்.

கட்சி உறுப்புரிமையே அற்ற முப்பத்தைந்து பேர் ஓர் இடத்தில் கூடியதை அ. இ. த. கா. கட்சியின் செயற்குழுக் கூட்டம் என்று கூறுவது, கட்சியின் தலைவர் செயலாளரை நீக்கி விட்டோம் என்று தீர்மானம் எடுப்பது, புதிய நிர்வகிஸ்தர்களைத் தெரிவு செய்வது அத்தனையும் கேலிக்கிடமான செயலாக அமைகின்றது. விரைவில் இப்பேர்ப்பட்ட சுயநலமிகளில் அ. இ. த. கா. கட்சி ஏற்ற நடவடிக்கை எடுக்க இருக்கின்றது. (உ)

## பாராட்டுப் பெற்றார்

[காரைநகர்]

காரைநகர் பாலாவோடையைச்சேர்ந்த சுப்பன் சின்னப்பிள்ளை அதேஇடத்தில் நடைபெற்ற வைபவமொன்றிற்கு செல்கையில் கழுத்தில் அணிந்திருந்த 3780 ரூபா பெறுமதியுடைய தங்கச் சங்கிலியினை தவற விட்டாரார்ம் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் புவனேஸ்வரி என்னும் யுவதி அதனை கண்டெடுத்து அதனை அவரிடம் ஒப்படைத்து பாராட்டினார்.

## பேச்சுப்போட்டியில் பரிசுபெற்றார்

(சங்கானை)

சுதுமலை நாமகள் கலாமன்றம் நாலாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடாத்தியபேச்சுப்போட்டியில் செல்வன் பிரபாகரன் முதலாம் இடத்தைப் பெற்று வெள்ளிக்கிண்ணத்தை பரிசாகப் பெற்றுக்கொண்டார்.

சிவபாத சுந்தரனாரின் நூற்றாண்டு விழாவை யொட்டி உடுவில் வட்டாரத்தில் நடைபெற்ற சேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தையும் வடமாகாண ரீதியில் நிகழ்ந்த பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்ற இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனுமாவார். (ஈ)

## பெற்றார்கோரிக்கை

(மட்டக்களப்பு)

படுவான் கரையிலுள்ள நரிப்புல் தோட்டம் அ. த. க. பாடசாலை நீண்டகாலமாக பெண் ஆசிரியரின்றி இயங்கி வருகின்றது. இதனையிட்டு கல்வி இலாகாவினரும் ஆட்சி மன்றப்பிரதிநிதிகளும் ஆவன செய்யும்படி அவ்வூர்ப் பொதுமக்கள் கோரிவருகிறார்கள். (அ)

## கூரைபிரித்து கொள்ளை

(களுத்துறை)

களுத்துறை தெற்கிலுள்ள வீடொன்றின் கூரை பிரிக்கப்பட்டு கைக்கடிகாரங்கள், பீடவைகள் உட்பட 19,000ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் நேற்றுக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## ஜன்னலுடைத்து திருட்டு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் உள்ள வீடொன்றின் சமையலறை ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 16,360 ரூபா பெறுமதிமிக்க பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

ஈழநாடு
The Eelanaadu

## புதியஅரசமைப்பு அமுல்

புதிய அரசியல் அமைப்பு இன்று முதல் அமுலுக்குவருகிறது. நாட்டின் பலபகுதிகளிலும் சிரமதானப் பணிகளும் கலை நிகழ்ச்சிகளும் மற்றும் கொண்டாட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்நாட்டில் அமுலிலிருந்து வந்த அரசியலமைப்புக்களிலிருந்து பெருமளவு வேறுபட்டதாக புதிய அரசியலமைப்பு விளங்குகின்றது.

ஜனநாயகசோஷலிஸம் தான் தனது கொள்கை என்று முன்னைய அரசும் கூறியது. முன்னைய அரசு உருவாக்கிய குடியரசு அரசியலமைப்பிலும் ஜனநாயக சோஷலிஸமே அரசின் கொள்கை என்று பிரகடனப்படுத்தியிருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், முன்னைய அரசு தமிழ்மக்களுக்கு உரிமையும் சலுகைகளும் வழங்குவதாக வெறும் வாக்குறுதிகளையே அளித்து வந்தது. அரசியல் நிர்ணயசபையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த அடிப்படைக் கொள்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன.

இன்று அமுலுக்கு வரும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு இதுவரை வழங்கப்படாத உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில் வெறும் வாக்குறுதிகள் போதாது, அரசியல் அமைப்பில் அவை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று தமிழ் மக்களும் தலைவர்களும் கூறிவந்திருக்கிறார்கள். புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இடம்பெறுவதற்கு மறுத்துவிட்டபின்னரும் தமிழ் மக்களுக்குப்பல உரிமைகளை புதிய அரசியல் அமைப்பில் வழங்கியிருப்பதும், முன்னர் இவற்றை வழங்க மறுத்தவர்களும் இதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியதும் பாராட்டுக்குரியது,

முன்னைய அரசியலமைப்பில் இல்லாத சில உரிமைகளை புதிய அரசியலமைப்பு வழங்கியிருக்கிறதை எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கமே பேரவையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அரசியல் உரிமை வழங்கப்பட்டிருந்தாலும் அவை சரிவர அமுல் நடத்தப்படுமா என்ற சந்தேகம் கடந்த கால அனுபவங்களிலிருந்து தமிழ் மக்கள் மனதில் எழுவது இயல்புதான். ஆனாலும் குறைகளை முறையிடுவதற்கும் நிவர்த்தி காண்பதற்கும் ''ஒம்புட்ஸ்மன்'' என்ற அதிகாரி நியமிக்கப்படுவது பெரும் ஆறுதலளிப்பதாகும்.

புதிய அரசியலமைப்பு எப்படி அமுல் செய்யப்படுகிறது, இதனல் என்ன மாறுதல்கள் ஏற்படுகின்றனவென்பதை அவசரப்படாமல் சிறிது பொறுத்திருந்து அவதானிப்பதே நல்லது.

தமிழ்ப்பகுதிகளில் இன்றும் நாளையும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ்மாணவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கேட்டுள்ளனர்.

# "தமிழ்க்காங்கிரஸ் சீரமைப்பு கூட்டணிக்கு எதிரானதல்ல

## புதிய தலைவர் சங்கரப்பிள்ளை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமிழ்க்காங்கிரஸ் கூட்டங்களையும், மகாநாடுகளையும் வைத்து தமிழ்க்காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்துங்கள் என்று மற்றக் கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டத்தில் வற்புறுத்தியபோது, கட்சி தேவையில்லை என்று கூறிக்கொண்டு, காங்கிரஸ் கூட்டங்களைக் கூட்டாது, திரு. எம். சிவசிதம்பரமும், திரு. ரி. சிவசிதம்பரமும் மௌனமாக இருந்தார்கள் கட்சியைப் பலப்படுத்தினல் தான் கூட்டணிக்கும் பலம் கூடும் என்ற கருத்தைப் புறக்கணித்தனர்.''

தமிழ்க் காங்கிரஸின் புதிய தலைவர் திரு. தா. சங்கரப்பிள்ளை, விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

1965 ம் ஆண்டு நடந்த தமிழ்க்காங்கிரஸின் மகாநாட்டில் திரு. மு. சிவசிதம்பரம் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டபோதிலும், அவர் பொதுச் செயலாளராக இருந்த 12 வருடங்களில் ஒரு செயற்குழுக் கூட்டத்தையோ, மாநாட்டையோ தனது கையொப்பமிட்ட அறிவித்தலைக்கொண்டு கூட்டவுமில்லை, எந்தக் கூட்டத்திலும் அறிக்கையையும் எழுதிக் கையொப்பமிடவுமில்லை, அவற்றைச் சபையில் வாசிக்கவுமில்லை. இது கடந்த 20 வருடங்களாக எழுதிவந்த கட்சிக் கூட்ட அறிக்கைப் புத்தகத்திலிருந்து மிகத் தெளிவாக இதைஅத்தாட்சிப்படுத்த முடியும். அமரர் ஜி ஜி.பொன்னம்பலம் மறைவுக்குப்பின், 6-3-77 ல் எனது வீட்டில் எனது கையொப்பமிட்டுக் கூட்டப்பட்ட செயற்குழுக் கூட்டத்தில், இவர்கள் தற்கா



லிக தலைவராகவும், தற்காலிக செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சி தேவையில்லை, கட்சியின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைத்திருக்கத் தேவையில்லையெனக் கூறிய திரு. மு. சிவசிதம்பரம் இப்பொழுது தானே தமிழ்க் காங்கிரஸ் தலைவர் எனக் கூறுவாரா?

3 இணைச் செயலாளர்களில் ஒருவரான நான் 6-3-77 ல் கூட்டிய கூட்டத்தில் தற்காலிகத் தலைவராக திரு. மு. சிவசிதம்பரமும், தற்காலிக பொதுச் செயலாளராக திரு. ரி. சிவசிதம்பரமும் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகுமானல், 8 இணைச் செயலாளர் கூட்டிய கூட்டம் எவ்வாறு பலனற்றதாக முடியும்?

### சீரமைப்பு எதிரானதல்ல!

34 செயற்குழு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு அனுப்பிய கட்டாய வேண்டுகோளின்படி மற்றைய இரு இணைச் செயலாளர்களும், கையொப்பமிட்ட கூட்ட அறிவித்தலுக்கு நானும் கையொப்பமிடவேண்டியது கடமையாகும். தமிழ்க் காங்கிரஸ் கட்சி சீரமைப்பு தமிழினத்தின் விடுதலைக்கோ தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளுக்கோ எதிரானது அல்ல என்பதைக் கூறவிரும்புகின்றேன்.

தற்காலிக தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தையும் தற்காலிக பொதுச் செயலாளராக திரு. ரி. சிவசிதம்பரத்தையும், பலமுறை கூட்டங்களைக் கூட்டுமாறு நானும் மற்றும் பல செயற்குழு அங்கத்தவர்களும், கடந்த ஏழு வருடங்களாகப் பதிவுத் தபால்மூலம் கேட்டிருக்கின்றோம். ஒருவருக்குமே இவர்கள் பதில் எழுதவில்லை.

செயற்குழுவின் மூன்றிலொரு பங்குக்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் வேண்டுகோள்படி கூட்டங்களைக் கூட்டுவதற்குப் பொறுப்பாக இருந்த இணைச் செயலாளர்கள் கூட்டும்பொழுது, தலைவரின் உத்தரவோ பொதுச் செயலாளரின் உத்தரவோ வேண்டியதில்லை. கூட்டத்திற்குத் தலைவரான திரு மு. சிவசிதம்பரம் சமுகமளிப்பார் என்ற நம்பிக்கையில் தான் யாருடைய தலைமையில் கூட்டம் நடக்கும் என்று கூட்ட அறிக்கையில் போடவில்லை.

இணைச் செயலாளர்களில் ஒருவரான நான் கூட்டிய செயற்குழுக் கூட்டத்தில், திரு. சி. அருளம்பலம், திரு. ஏ. தியாகராசா ஆகியோர் வெளியேற்றப்பட்டனர். அப்போது கூட்டம் செல்லுபடியாகாது என அவர்களும் அறிக்கை விட்டிருந்தனர். (சு)

## பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

கலவெட்டித்திடல் நாகேசுவரவித்தியாலய அதிபர் திரு வ. ஆழ்வாபிள்ளை இளைப்பாறுவதை முன்னிட்டுப் பெற்றூர். ஆசிரியர்கள் மாணவர்கள் திரு சி. முருகேசு தலைமையில் சேவை நலம்பாராட்டுவிழா நடாத்தினர். பாடசாலை மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் ஆசிரியர்கள் திரு. க. வைரமுத்து வ. மயில்வாகனம் திருமதி வைரமுத்து திரு. எஸ். தேவதாசன் ஆகியோர் பேசினர்.

திரு. வ. ஆழ்வாப்பிள்ளை நன்றி கூறுகையில் கிராமங்களின் முன்னேற்றத்தில்தான் நாடு தங்கியுள்ளது என்றூர்.

திரு. அ. வ. கனேசுவரன் அனைவருக்கும் மதியபோசன விருந்தளித்தார். (அ)

## சங்காபிஷேகம்

(உருத்திரபுரம்)

நெடுங்கேணி ஸ்ரீவில்லையடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அமைதியைக் குலைக்காமல், திரு. அமிர்தலிங்கம் வெளிநாடு புறப்படும்பொழுது கூறியதுபோல் தமிழ் மக்களைச் சிக்கலில் ஆழ்த்தக் கூடிய தேவையற்ற பிரச்னைகளில் எவரும் ஈடுபடக் கூடாது, ஈடுபடமாட்டார்களென்றே நம்பலாம்.

### கிளிநொச்சி முருகனுக்கு

# ராஜகோபுரம், சித்திரத்தேர் விரைவில் நிறைவேறுக

ஆன்மாவானது இறைவனோடு லயமாவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆலயம். எனவே இவ்வாலயம் அமைதியானசூழ் நிலையில் இயற்கை எழிலுடன் அமைய வேண்டியது அவசியம் அத்தகைய சூழலில் அமைந்துள்ள ஆலயம்தான் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவிலாகும்.

விவசாயிகள் வாழ்கின்ற இடங்களாகிய உருத்திரபுரம், இராமநாதபுரம், வட்டக்கச்சி, இரணைமடு, அக்கராயன், ஸ்கந்தபுரம், திருவையாறு, பூநகரி, கனகபுரம், கணேசபுரம், திருநக, ஜெயந்திநகர், கனகாம்பிகைக் குளம், பரந்தன், தருமபுரம், கண்டாவளை, குஞ்சுப்பரந்தன் போன்ற இன்னும் பல கிராமங்களை உள்ளடக்கிய இத்தொகுதியின் மத்தியில் எழுந்தருளி அருள்புரியும் ஒரேயொரு பிரசித்திபெற்ற அற்புத ஆலயம் கிளிநொச்சிக கந்தசுவாமிகோவிலாகும்.

இவ்வாலயத்தில் வருடந்தோறும் ஆவணி மாதம் சுவாதி நட்சத்திரம் கூடும் தினத்தில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வருட மகோற்சவம் இன்று 7ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 15ந் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் 16ந் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பூங்காவன உற்சவத்துடன் மகோற்சவம் முடிவடையும்.

-- க. ஶ்ரீகரன் --

உற்சவ காலமான பத்துத் தினங்களும் கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி இ. போ. ச. டிப்போ, திருவையாறு படித்த வாலிபர் திட்டம் என்பனவும் கோவிலுக்கு அருகில்உள்ள கிராமங்களைச் சேர்ந்த அடியார்களும் இறுதிநாளான பூங்காவன உற்சவத்தைக் கிளிநொச்சி, பரந்தன் வர்த்தகர்களும் செய்துவருகின்றனர்.

கிளிநொச்சிப் பகுதியில் வாழும் சைவப் பெருமக்களின் முக்கிய திருத்தலமாகத் திகழும் கந்தசுவாமி கோவிலைப் பல அண்டுகளுக்கு முன்னர் முகாந்திரம் சி. வெற்றிவேலு என்ற பெருந்தகை இப்பகுதியில் வாழ்ந்த சைவ அன்பர்களின் உதவியோடு நிறுவினர் என்றும் அவரே இக்கோவிலை நடாத்தி வந்தார் என்றும், அவர் காலமானதைத் தொடர்ந்து 1964 ம் ஆண்டுப் பிற்பகுதியில் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டதும் சபையினரிடம் கோவில் பொறுப்பு முழுவதும் கொடுக்கப்பட்டது என்றும் இவ்வாலய சரித்திரம் கூறுகின்றது. 1971 இல் மேற்படி சபை புனருத்தாரணம் செய்யப்பட்டு, இப்பகுதியில் வாழும் சைவப் பெருமக்களினதும் விவசாயப் பெருங்குடி மக்களினதும் நிதியுதவியைப் பெற்று இச்சபை ஆலயத்தின் ஒருபகுதி வேலையைச் செய்து முடித்தது.

ஆலயம் முழுமை பெறச் செய்ய வேண்டிய ஆக்கவேலைகள் பல உள. அப்பணிகளை இப்பகுதியில் வாழுகின்ற நல்ல மனமுள்ள சைவ அன்பர்கள் மனத்திற் கொள்வார்களேயாயானல் அவற்றை நிறைவேற்றி முழுமையுள்ள ஓர் ஆலயமாக வான்முட்டும் இராஜகோபுரத்துடன் சித்திரத்தேர் ஓடும் காட்சியை நாம் அனைவரும் விரைவிற்காணலாம் என்பது திண்ணம்.

கிளிநொச்சி நெற்களஞ்சியத்தில் வாழும் விவசாயப் பெருமக்களின் அரியதோர் சாதனையாக இவ்வாலயம் அமைவதற்கு, நம்மவர் கண்களை விழிக்கச் செய்ய நல்லருள் புரியும் வண்ணம் முருகன் திருவடியை வேண்டி நிற்போம். (அ)

## மணிவாக்கு

வெற்றிபெற வேண்டும் என்ற உங்கள் திடமான எண்ணம்தான் வேறு எந்த ஒரு காரியத்தையும் விட மிகமிக முக்கியமானது.

—எமர்ஸன்

## நார் சேர் நறுமணம் போல்.....

நீர் ஊறும் கிளிநொச்சி
நிலம் பெருகி விளைவாக்கும்
பேர் சேரும் புகழெல்லாம்
பெம்மான் உன் அருளாலே,
தேர் ஊரும் திருநாளில்
கூரண்டுரே சேர்ந்துவிடும்
நார் சேரும் நறுமணம் போல்
நான சேர்வேன் உன்தாழே!

– சின்ன இராஜேஸ்வரன்.

# மத்தியகிழக்கு விவகாரத்தில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமையுண்டு

## எகிப்திய அதிபர் சதாத் கருத்து

நியூயோர்க், செப். 6

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்காவுக்கு தகைமையும் உரிமையும் உண்டென எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் நியூயோர்க்கில் தெரிவித்துள்ளார்.

உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா வந்தபோதே அன்வர் சதாத் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இந்த உச்சி மகாநாட்டில் துணிச்சலுடனும் ஆழ்ந்த அக்கறையுடனும்தாம் பல ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் ஜனுப் சதாத் தெரிவித்துள்ளார்.

### பெகின் கருத்து

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து சமரசப் பேச்சுவார்த்தைகளின் போது சமாதான உடன்படிக்கைகளை மேற்கொள்ள தம்மாலான சகல முயற்சிகளையும் செய்யத் தாம் தயாராக இருப்பதாக அமெரிக்கா வந்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமானுல் எகிப்தும் இஸ்ரேலும் தத்தமது பிடிவாதப் போக்குகளைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ)

சமாதானப் போர்வையில்

## மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவத் தலையீடு

### ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, செப். 6

சமாதானம் என்ற போர்வையில் அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது இராணுவ பலத்தை நிலைநாட்ட முயற்சி எடுத்து வருகிறது.

இவ்வாறு சோவியத் யூனியன் அமெரிக்காவைக் குற்றம் சாட்டியுள்ளது.

மத்திய கிழக்கு சமாதானம் குறித்து அமெரிக்க அதிபரின் காம்ப்டேவிட் வாசஸ்தலத்தில் நடைபெறும் இஸ்ரேல் - எகிப்து - அமெரிக்க உச்சிமகாநாட்டையும் ரஷ்யா கண்டித்துள்ளது

சமாதான கண்காணிப்பு என்ற போர்வையில் ஜோர்டானின் மேற்குக் கரையோரத்தில் அமெரிக்கா படைகளைக்குவித்து வைத்துள்ளது என்றும் ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. (இ)

## பாம்புக் கற்றுளை உற்பத்தி

(உடுப்பிட்டி)

வடமராட்சி வடக்கு-கிழக்குக் கரையோர நிலங்களில் பாம்புக் கற்றுளையை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

அம்பன், குடத்தனைப் பகுதிகளில் ஐந்து ஏக்கர் நிலத்தில் இப்பாம்புக் கற்றுளைப்பண்ணை நிறுவப்படவுள்ளது.

இக்கற்றுளையிலிருந்து மருந்துவகைகள் தயாரிக்கப்படுவதுடன் தாளைநார் உற்பத்தியும் செய்யமுடியும் என்றும் இச்கற்றுளைப் பண்ணை மூலம் சிறுகைத்தொழில் துறையை மேற்கொண்டு வேலைவாய்ப்பும் வழங்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பிரிட்டனில் அக். 5-ல் தேர்தல்?

லண்டன், செப். 6

பிரிட்டனில் அக்டோபர் மாதம் 5-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளையில், நேற்று நடைபெற்ற தொழிற் சங்கக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன், பிரிட்டிஷ் பொதுத் தேர்தலுக்கான திகதியை தாம் விரைவில் அறிவிப்பதாகக் கூறியுள்ளார். (இ)

# “நம்மவர் படைப்புகளை இறக்குமதி செய்யும் நிலையில்லையே”

## திருப்பூர் மாநாட்டில் அந்தனிஜீவா

(திருப்பூர்)

“இந்தியத்திரைப்படங்கள், இந்திய நூல்கள் எமது நாட்டில் வந்து எம்மைச் சுரண்டுவதையே தொழிலாகக்கொண்டுள்ளன. ஆனுல் எமது நாட்டுப் பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ, திரைப்படங்களையோ இந்திய நாட்டில் இறக்குமதிசெய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது”.

இவ்வாறு இலங்கை எழுத்தாளர் திரு. அந்தனிஜீவா தென்னிந்தியா திருப்பூரில் நடைபெற்ற தமிழ்நாடு கலை, இலக்கிய பெருமன்ற 4-வது மாநாட்டில் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்துகையில் கூறினுர்.

அவர் மேலும் சொன்னதாவது:

### நேற்றைய இன்றைய பிரச்னையல்ல

இலங்கையில் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக சஞ்சிகைத்துறையின் வளர்ச்சிக்கு இந்தியச்சஞ்சிகைகளின்கட்டுப்பாடற்ற இறக்குமதியின் காரணமாக ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு குந்தகமான விளைவுகள் ஏற்படுகின்றது என்ற உண்மையினை இருநாடுகளிலும் உள்ள நேர்மையான சத்திய வேட்கை கொண்ட இலக்கியவாதிகள் ஒத்துக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதிப் பிரச்னைகள் இன்று நேற்றல்ல, முப்பதுநாற்பதுஆண்டுகளுக்கு முந்தியதாகும். இந்தியப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தங்கு தடையின்றி இங்கு வந்து குவிவதால் இலங்கையின் தமிழ் இலக்கியத்துறையும், சஞ்சிகைத்துறையும் பாதிக்கப்படுகின்றன. நாட்டுப் பற்றுக்கொண்ட எழுத்தாளர்களும், தமிழ் அறிஞர்களும் இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதிக்கு எதிர்ப்பாக குரல் கொடுத்தனர்.

பின்னர் 1961-ம் ஆண்டு இலங்கைமுற்போக்கு எழுத்தாளர் சங்கம் அது கூட்டிய அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் பொதுமகாநாட்டுக் காலத்தில் இந்தக்கருத்தை ஸ்தர்பன ரீதியாக முன்வைத்தது. எழுத்தாளர்களும், சஞ்சிகைகள் வெளியீட்டாளர்களும் ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தனர். தேசியப் பத்திரிகைகளும், எழுத்தாளர் நிறுவனங்களும், இலக்கிய அமைப்புக்களும் ஆதரவுதர முன்வந்தன. காலப்போக்கில் தேசியக் கோரிக்கையாக நாடு தழுவிய போராட்டமாக மலர்ந்தது.

### தீர்க்கமான முடிவு

இந்தக் காலகட்டத்தில் தான் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1970-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது. இந்தப் பிரச்னையை இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்தது. அரசு இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சியில்அக்கறைகொண்டு கலை, கலாச்சாரவாதிகளின் கோரிக்கைகளின்படி தீர்க்கமானமுடிவை எடுத்தது. அரசு எடுத்த முடிவின் பிரகாரம் தென்னகத்திலிருந்து தரமானதும், தரம் குறைந்தாலும் ஜன அபிமானத்தைப் பெற்றுவிட்டதுமான பத்து சஞ்சிகைகள் இறக்குமதியாகின. இலக்கியம், அறிவு ஆகிய துறைகளைச் சார்ந்த தரமான சஞ்சிகைகளின் இறக்குமதித் தொகை பத்திலிருந்து இருபது மடங்குவரை அதிகரிக்கப்பட்டுள்ளதுஉதாரணமாக ‘தீபம்’: சுமார் 800 பிரதிகளிலிருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

# தாஜ்மகாலையும் வெள்ளம் பாதிக்கலாம்!

புதுடில்லி, செப். 6

ஜமுனை நதியின் சீற்றம் தாஜ்மகால் அமைந்திருக்கும் ஆக்ரா மாநிலத்தையும் பாதிக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருக்கெடுத்து ஓடும் ஜமுனை நதியின் நீர் தாஜ்மகாலைச் சூழ்ந்து பெருமசேதம் விளைவிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட ஆற்றுப் பெருக்கை அடுத்து வடமேற்கு டில்லியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனுல் டில்லியில் உள்ள பல வானெலி நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சகலகட்சியினரும்ஓரணியில் நாட்டுக்காக உழைக்கவேண்டும்

## மதுரையில் இந்திய ஜனுதிபதி

சென்னை, செப். 6

ஆட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் சகல தரத்தில் உள்ளோரும் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கட்சி பேதங்களை மறந்து ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் இலட்சியத்தை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்.

இவ்வாறு இந்திய ஜனுதிபதி திரு. நீலன் சஞ்சீவ ரெட்டி மதுரையில் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மன்றம் அளித்த வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்ட ஜனுதிபதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

தேர்தலின் போது, சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகளும் தோன்றுவது இயல்பே. ஆனுல் தேர்தல் முடிந்ததும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மக்களின் நலனுக்காகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒரே அணியாக நின்று உழைக்க வேண்டும்.

மதுரையில் வானெலி நிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று விடுத்த கோரிக்கை பற்றி கருத்துத் தெரிவித்த ஜனுதிபதி, இது குறித்து மத்திய மாநில அமைச்சர்களுடன் பேச்சு நடத்துமாறும் தாமும் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (இ)

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 22-ந் திகதி
வியாழக்கிழமை
(7-9-78)

**மேடம்:-** உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும், குடும்பத்தர்களின் வாழ்வில் இனிமை தவழும், சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும், வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

**இடபம்:-** திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும், அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், கடற்றெழிலாளர்கள் கவனம் செலுத்தவும், சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம்.

**மிதுனம்:** பிதாவழிமூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம், ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள், பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கக்கூடும், பெரியோரின் ஆதரவும் தவருமல் கிடைக்கும்.

**கடகம்:-** வாழ்க்கையில் வசதிகள் பெருகும், கற்றதனுல் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும், செய்தொழிலில் புதிய உத்திகளைக் கையாளுவீர்கள், சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

**சிங்கம்:-** பலவழிகளாலும் பணவரவிற்கு இடமுண்டு, வழக்கறிஞர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம், பிள்ளைகள்மூலம் பெருமைதரும் சம்பவங்கள் நடைபெறும், வரவேற்க வேண்டிய நாள்.

**கன்னி:-** எதிலும் மந்த நிலை தென்படும், பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**துலாம்:-** கரும்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கக்கூடும், மனப்போராட்டங்களினுல் வேதனைப்படுவீர்கள், அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப இலாபமே கிடைக்கும், முன்னெச்சரிக்கை வேண்டும்,

**விருச்சிகம்:-** நிதியில் அபிவிருத்தி காணப்படும், பூர்வீகச் சொத்தொன்று உமக்குக் கிடைக்கக்கூடும், புண்ணிய விருப்புக்கிடமுண்டு, உடல் நிலையில் அபிவிருத்தி தென்படும், திருப்திகரமான நாள்.

**தனுசு:-** சிந்தனைக் கணைகள் தாக்கும், கடந்தகால எண்ணங்கள் அலைமோதும், சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

**மகரம்:-** மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொருமைப்படும் அளவிற்கு முன்னேற்றமுண்டு, அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், சிறப்பான தினம்.

**கும்பம்:-** ஒளிமயமான எதிர்காலத்திற்கு இன்று வித்திடப்படும், சிலர் வாழ்க்கையில் திருமணப் பேச்சும் இடம் பெறும், தங்கையின் முன்னேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மீனம்:-** பகைமூட்டம் வட்டமிடும், வீணை வார்த்தைகளால் மனம் புண்படும், தொழில் துறையில் முட்டுக்கட்டை தென்படும், கடிதமொன்று கவலையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
PAM GRIER
of
'THE ARENA' FAME
in
Friday Foster
(Strictly for Adults)

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன் - ஜெயலலிதா
சூரியகாந்தி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர் - சாவித்திரி
ஜக்கம்மா

## "சுவர்க்கவாயில் திறந்திருக்கும்"

(யாழ்ப்பாணம்)

"'பஞ்சகௌவியம், திருநீறு, எரு முதலாய பல பொருட்களேயும் பாலேயும் தந்துதவும் பசுக்களேக் களவாகப் பிடித்து இறைச்சிக்கு விற்பது மகா பாதகம். தொண்டர்கள் ரோந்து புரிந்தாவது இவற்றை மீட்டால் நிச்சயம் எமக்கு சுவர்க்கவாயில் திறபட்டிருக்கும்."

இவ்வாறு புளியம்பொக்கணை கிராமசேவையாளர் ம்ரு. ந. அரியரத்தினம் கலவெட்டித் திடல் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில் நடந்த கி. மு. சபை ஆண்டு நிறைவுவிழாவில் பேசுகையில் கூறினார்.

இளேப்பாறிய அதிபர் திரு. சி. முருகேசு தலைமை வகித்தார்.

திருவாளர்கள் க. வைரமுத்து, வ. ஆழ்வாப்பிள்ளை, அ. வேலாயுதம், சி. பேரம்பலம், வே. மயில்வாகனம், செ. விஞசித்தம்பி, க. குமாரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (அ)

"தமிழர் பிரச்னைதீர்வுக்கு

# எந்த நடவடிக்கையும் இடதுசாரிகள் எடுக்கவில்லை

## அஞ்சல் எ. வி. மாநாட்டில் ஆனந்தசங்கரி

(யாழ்ப்பாணம்)

"நான் ஒரு காலத்தில் இலங்கை சமசமாஜக் கட்சித் தோழர்களுடன் உறவாடியவன், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இடதுசாரிகள் தீர்க்கமான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இனியும் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ்வது சாத்தியமில்லை என்பதால் நாம் ஒருமித்து தமிழ் ஈழப் பிரிவினையைக் கோருகின்றோம்."

கிளிநொச்சித் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி கிளிநொச்சிப் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் பதினேழாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு கு. டே. செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வீ. ஆனந்தசங்கரி தொடர்ந்து கூறியதாவது:- அஞ்சல் திணைக்களத்தின் பிரதேசக் கிளைகளைக் கிளிநொச்சித் தொகுதியிலும் அமைப்பதற்கு நான் என்னுலான முயற்சிகளை மேற்கொள்வேன். முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர் திரு. குமாரசூரியர் கொழும்புக்கும், மாத்தறைக்கும், கண்டிக்கும், ஹட்டனுக்கும் நேரடித் தொலைபேசிச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்திருக்கும் என்றால் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் ஏன் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் போனது? கிளிநொச்சிப் பட்டினசபை மண்டபத்தையும் மார்க்கட்டுக் கட்டிடங்களையும் பெருமளவு பணச் செலவில் உபயோகமற்றமுறையில் கட்டி முடித்ததுதான் அவரது சாதனை. ஒரு காற்றுடிக்குக் கூட வசதியில்லாமல் செய்திருக்கிறார். அவரது காலத்தில் இங்கு நடைபெற்ற விபரங்கள் அளப்பரியன.

சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. கு. டே. செல்வராசா பேசுகையில், 'சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறைகளால் கஷ்டப்பட்ட நாம் மொழிவழித் தொழிற் சங்கமாகப் பிரிந்து வாழ்கின்றோம். எமது உறுப்பினர்களை ஒரே சங்கத்தில் இணைந்து பணியாற்றும்படி வேண்டுகின்றோம்' என்றார்.

சங்க மகாநாட்டில் கௌரவிக்கப்பட்ட முன்னாள் உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் முன்னாள் உதவிச் செயலாளர் திரு. செ. யோகேஸ்வரன், ச. சு. செபரத்தினம் ஆகியோரும் பேசினர். (அ)

## சூட்டுக்கொலை

(சிலாபம்)

. சிலாபத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக பியரத்தின என்பவர் பொலிசாரால் தேடப்படுகிறார்.

## நாரந்தனை சமய விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு தான்தோன்றி அம்மன் கோயில் மண்டபத்தில் சைவ சமய விரிவுரைகள் கோயிலின் பரிபாலனசபைத் தலைவர் திரு. நா. கந்தஞானி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

யாழ். பசுப் பாதுகாப்புச் சபை ஆதரவில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை "புலால் உண்ணமை" பற்றியும், திரு. சி. பொன்னம்பலசுவாமி "பசு ஓம்பல்" பற்றியும் உரையாற்றுவர். [உ]

## வவனியாவுக்கு மேலும் இரு புதிய பஸ்கள்

(வவனியா)

வவனியாவிற்கு வெகுவிரைவில் மேலும் இரண்டு புதிய பஸ்களை அனுப்பிவைப்பதாக வட பிராந்திய இ. போ. ச. தலைவர் திரு. அமரசிங்கம் உறுதியளித்துள்ளார். வவனியா தொகுதி போக்குவரத்து பிரச்னைகளை அறிவதற்காக வவனியா எம் பி. இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், எம். பி., இ. போ. ச. தலைவர், வவனியா டிப்போ அத்தியட்சகர், வவனியா பிரயாணிகள் சங்கத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். உள்ளூர் பஸ் சேவைகட்கு முதலிடம் கொடுப்பதாகவும் பாடசாலை நகர சேவைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதாகவும, அதிகாரிகள் இணக்கம தெரிவித்தனர். ]உ)

## 4 வருடச் சிறை

(வவனியா)

பாயசாலையை உடைத்து திருடியவருக்கு 4 வருடச் சிறைத்தண்டனை கிடைத்தது. வவனியா, பண்டாரிக்குளம் பாடசாலையை உடைத்து 165 ரூபா பெறுமதியான பொருட்களை திருடியதாக அவ்வூரைச் சேர்ந்த வ. தர்மலிங்கம் என்பவருக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வவனியா பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் சந்தேக நபருக்கு 4 வருட சிறைத் தண்டனையை வவனியா மாவட்ட நீதவான் திரு. ஜி. என். வீரரத்ன விதித்துத் தீர்ப்பளித்தார். (உ)

## நம்மவர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

3000 பிரதிகளாகவும், 'மஞ்சரி': 300 பிரதிகளிலிருந்து 2000 பிரதிகளாகவும், 'தாமரை': 150 பிரதிகளிலிருந்து 200 பிரதிகளாகவும், 'ஆராய்ச்சி': 60 பிரதிகளிலிருந்து 1000 பிரதிகளாகவும், 'அமுதசுரபி': 100 பிரதிகளிலிருந்து 2000 பிரதிகளாகவும், 'கலைமகள்': 1500 பிரதிகளிலிருந்து 3000 பிரதிகளாகவும் அதிகரிக்கப்பட்டன.

இறக்குமதிப் பட்டியலில் இல்லாததும், அனுமதிப்பட்டியலில் இடம்பெருததுமான வேறு தரமான சஞ்சிகைகளை இறக்குமதி செய்ய விரும்புபவர்கள் தக்க காரணங்களுடன் அரசுக்கு விண்ணப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.. ஆனல் இந்தக்காலக் கட்டத்தின் பின்னர் இலக்கிய வளர்ச்சியில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை காணப்பட்டது. ஒரு பத்திரிகை ஸ்தாபனம் 60 நாவல்களை வெளியிட்டுள்ளது. புதிய சில சஞ்சிகைகளும் தோன்றின.

அரசியல் சூழ்நிலையால் ஏழு ஆண்டுகளுக்குப் பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இந்திய சஞ்சிகைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. 30க்கு மேற்பட்ட இந்திய சஞ்சிகைகள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. 'நசிவு' இலக்கியங்கள் என வர்ணிக்கப்படும் ஏராளமான சினிமா சஞ்சிகைகள் இங்கு வந்து குவிகின்றன. இதனல் இலங்கையின் இலக்கிய வளர்ச்சி மாத்திரமல்ல, வளர்ந்துவரும் இளைய தலைமுறையினரின் ஒழுக்கவளர்ச்சி மன வளர்ச்சி ஆகியவற்றிலும்கூட பெரும் பாதிப்பு ஏற்படலாம்.

## வள்ளியம்மை திருமணப் படனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்றுவந்த கந்தபுராண படனத்தின் பூர்த்திப்படிப்பு வள்ளியம்மைத் திருமணப் படனம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் விசேட பூஜை, ஆராதனைகளுடன் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ)

உதயசூரியன்கொடி

## மானிப்பாய் எம்.பி ஏற்றிவைப்பார்

(தெல்லிப்பழை)

புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வரும் இன்று காலை 10 மணியளவில் கட்டுவன் தெற்கு பாரதி சன சமூகநிலைய முன்றலில் மானிப்பாய் எம்.பி திரு. வி. தர்மலிங்கம் உதய சூரியன் கொடியை ஏற்றிவைப்பார். அதனைத்தொடர்ந்து தமிழ் ஈழதேசிய கீதம் இசைக்கப்படும்.

இவ்வைபவத்தில் காங்கேசன்துறை தமிழர்விடுதலைக்கூட்டணி உப தலைவர் சட்டத்தரணி திரு. ஏ. குமரகுரு, தெல்லிப்பழை ப. நோ. கூ. இயக்குநர் சபைத் தலைவரும் கூட்டணிக் காரியதரிசியுமான திரு. செ. சிவமகாராசா உட்பட கூட்டணிக்கிளை உறுப்பினர்களும் கலந்துகொள்வர். (ஈ)

## நவாலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

நவாலிதெற்கு முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று பகல்கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 15ம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்த உற்சவமும் 17ம் திகதிமாலை பூங்காவன உற்ச்வமும் நடைபெறும். மேற்படி உற்சவங்களை கோவில் பிரதம குரு பிரமஸ்ரீ ஐ. சோமசுந்தரக் குருக்கள் நடாத்திவைப்பார். உற்சவதினங்களில் இரவுநேரம் நேரம் நல்லைஞானசம்பந்த ஆதினகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகரான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவார்.

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642. தினசரி 10-30, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா
(புத்தம் புதிய பிரதி)
நிதியுதவிக்காட்சி 9-9-78 காலை 10-30 காட்சி மட்டும்
குங்குமம்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி சரோஜாதேவி-தேவிகா
குலமகள் ராதை

REGAL Jaffna 4th CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர் போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

வெற்றிகரமான 75வது தினம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பெரும் புகழும்

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் இன்று மட்டும்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம் நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா
நடித்த
சாந்தி

# புதிய அரசியலமைப்பு; பரபரப்புத் தேவையில்லை

-- சுயாட்சி நவம்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு இன்று அமுலுக்கு வருவது சம்பந்தமாக தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்;

கடந்த முப்பத்தொரு ஆண்டுகளாக எத்தனையோ புதுப்புதுச் சட்டங்களும் அரசமைப்புச்சாசனங்களும் ஆக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்றுதான் இன்று அமுலுக்குக் கொண்டுவரப்படும் புதிய அரசமைப்புச் சட்டம் இதைப்பற்றி மக்கள் பரபரப்புக்கொள்ளத் தேவையில்லை. தமிழ் மக்களாகிய நம்மைப் பொறுத்தவரையில் இந்த புதிய அரசமைப்பினுல் வரவுமில்லை செலவுமில்லை. இரண்டு இனங்களையும் இரண்டறக்கலப்பதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். தமிழ்மக்கள் விடுதலையை விரும்பினுல் இனிமேலாவது ஏமாறுமல் இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

"சாதிப்பாகுபாடு களைய

# சனசமூக நிலையங்கள் உழைக்கவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

''தமிழ்மக்கள் தமிழீழ இலட்சியப் பயணத்தில் வீறு நடைபோடும் இந்நேரம் நம் மத்தியில் காணப்படும் சாதிப் பாகுபாடுகளைக் களைந்தெறிய சனசமூகநிலையங்கள் முன்னின்று உழைக்கவேண்டும்''

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை யாழ். சென்ஞேக் சனசமூகநிலைய 15வது ஆண்டுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறிஞர்.

அவர் தமது உரையில் மேலும்கூறியதாவது: சாதிக்கு ஒரு சனசமூகநிலையம் என்று பிரிவினை கோராது அப்பகுதி மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சாதிகளைக் களைந்து புதியதொரு சமுதாயத்தை சனசமூக நிலையமானது கட்டியெழுப்பவேண்டும். இந்த வகையில் சென் ஞேக் சனசமூக நிலையத்தை ஏனைய சங்கங்களும் பின்பற்ற வேண்டும்'' என்ருர்.

விழாப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ஞண்டோ பரிசில்களை வழங்கினுர்.

நிலையச்செயலாளர் திரு. வி. எம். ஜெரூட். வண. பிதா எஸ். செல்வராஜா, திரு. ஏ. விக்டர் ஆகியோரும் உரையாற்றினர்.

நாடகங்களும் இடம்பெற்றன. (உ)

# 'அறச்சாலைகள்ஒன்றியப்பணி பரவலாகவேண்டும்'

-- நீதிபதி ஞானச்சந்திரன்

[மட்டுவில்]

''அகில இலங்கை தமிழ் இந்து அறச்சாலைகள் ஒன்றியம், ஏனைய அறச்சாலைகளையும், இணைத்துப் பரவலாகப் பயனுள்ளபணிகளைத் தொடரவேண்டும். இந்து சாத்திரப் பயிற்சிகள், கல்லூரி நிறுவுதல், இந்து தியாகிகள்பீடம் அமைத்தல் போன்ற இன்னேரன்ன அம்சங்களிலும் இதன் விஸ்தரிப்புகள் பல மிகவும் அவசியமாகின்றன. இந்துமத தொண்டர்களைப் பயிற்றுதலின் மூலம் கிராம ரீதியிலான ஆன்மீகப்புரட்சியை நிச்சயமாக ஏற்படுத்த முடியும்''

இவ்வாறு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் அகிலஇலங்கை இந்து அறச்சாலைகள் ஒன்றியத்தின்போது கூறினுர்.

கைதடி சைவஅநாதை இல்லத்தில் நடைபெற்ற அகிலஇலங்கை இந்து அறச்சாலைகள் ஒன்றிய கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு கூறிஞர். வதிரி பரமானந்த ஆச்சிரம சுவாமி ஸ்ரீபரமானந்த சுவாமிகள் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஞானச்சந்திரன் தொடர்ந்து கூறியதாவது:

''இந்த ஒன்றியம் தன்னை பிரசித்திப்படுத்தி, இந்துக்கள் மத்தியில் ஆதரவைத் திரட்டி ஆக்கபூர்வமான அறப்பணிகளைச் செய்வதுடன் தம்மை சைவப்பணிக்கு அர்ப்பணிக்கும். தியாகிகள், அறநெறியாளர்கள்,சேவையாளர்கள், போன்ருேரை உருவாக்குதல்வேண்டும்''.

கிளிநொச்சி ஆதாரக்கல்வி குருகுல நிர்வாகி திரு. வே. கதிரவேலு பேசுகையில், ''சைவஅநாதைகளின் எதிர்கால் நலனைச் சிந்தித்து ஒன்றியம் செயற்படுவதுடன், திறமையும், செயற்சேவையும் ஆர்வமுடையவர்களை சமயப்பணிக்கு ஏற்றவாறு பயிற்சியளித்துப் பயனடையச் செய்யவேண்டும் என்ருர்.

சைவஅநாதை இல்லப் பொறுப்பாளர் திரு. ஆ. கந்தையா பேசுகையில் ஒன்றியத்தின் இலட்சியங்களை நிறைவேற்றி சமய சமூக வளர்ச்சிக்கு வழிகாட்ட சகலரும் ஒத்துழைக்கவேண்டும்'' என்ருர். சகோதரி புலவர் விசாலாட்சி பரமானந்தா, தலைவர் உட்பட பலர் பேசினர். (உ)

# வணக்கஸ்தலங்களில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிற்றல் நிகழ்ச்சி இடம் பெறும்.

அரசாங்க அலுவலங்கள், பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் அந்தந்த நிறுவனத் தலைவர் அல்லது உள்ளூர்த் தலைவர் இன்று புதிய அரசியலமைப்புக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள வேண்டும்.

மேலும் அவர் தமது நிறுவனத்திலுள்ள எல்லா அரச அலுவலர்களும் விசுவாசச் சத்தியப்பிரமாணம். எடுப்பதற்கான தக்க ஒழுங்குகளைச் செய்தல்வேண்டும்.

## கொழும்பில்

கொழும்பில் ஜனதிபதியால் புதிய அரசியலமைப்புக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் எடுத்தல் உட்படப் பாராளுமன்றத்தில் சம்பிரதாய வைபவமும், தேசிய அரசுப் பேரவையை விளித்து ஜனதிபதி ஆற்றும் உரையும் முற்பகல் 9-00 மணிக்கு இடம்பெறும்,

பிற்பகல் 4-00 மணிக்குப் பருத்தித்துறை, தெவிநுவர, மட்டக்களப்பு, கொழும்பு எனும் இடங்களிலிருந்து மரதன் ஓட்ட வீரர்கள், சுகததாச விளையாட்டரங்கை வந்தடைதலும் சூள் ஒளி ஏற்றுதலும் இடம்பெறும்.

பிற்பகல் 4-10மணி தொடக்கம் 5-00 மணி வரை கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2,000 மாணவ மாணவிகளால் சுகததாச விளையாட்டரங்கில் அணிவகுத்து உடற்பயிற்சி செய்தல் முதலியவையும் நடைபெறும்.

## யாழ்ப்பாணத்தில்

புதிய அரசியலமைப்புப் பிரகடனத்தின நிகழ்ச்சிகளாக இன்று காலை 7-00 மணிக்கு வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில், ஸ்ரீநாகவிகாரை ஆகியவற்றில் நடைபெறும் பூசை நிகழ்ச்சிகளிலும் மத அனுஷ்டானங்களிலும் யாழ், அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ஞண்டோ கலந்துகொள்வார்.

கிறிஸ்தவ ஆராதனையில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. ஜெகநாதனும், இஸ்லாமிய மத வைபவத்தில் யாழ் கச்சேரிக் காணியதிகாரி ஜனப் மக்பூலும் கலந்துகொள்வர்.

வண்ணை வரதராஜப்பெருமாள்கோவிலில் இன்று காலை 7-00 மணிக்கு இவ்விசேஷ பூசை இடம்பெறும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல அரசாங்கத் திணைக்களக் கட்டிடங்களிலும் இன்று தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படும்

அந்தந்த அரசாங்கத் திணைக்களப் பிரிவுத் தலைவர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார்கள்.

வடபகுதியில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் ஏற்படாதவண்ணம் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர்.

புதிய அரசியலமைப்புப் பிரகடனத்தை முன்னிட்டு யாழ் அரசாங்கச் செயலகத்தின் முன்புறம் வர்ண மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இன்று காலை 8-00 மணியளவில் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ஞன்டோ தெசியக்கொடியை ஏற்றிவைப்பார். (உ-சு.

## சுதந்திர...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வழங்குகின்றது என்றும் கடந்த 14 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள சாதனைகள் பாராட்டும்படியாக அமைந்துள்ளன வென்றும் நாட்டின் அபிவிருத்திப் பணியில் தாமும் பங்கேற்றுக் கொள்வதற்கு அரசுடன் சேர்ந்துகொள்ள முடிவுசெய்ததாகவும் அவர் கூறிஞர்.

# சிறைத்தண்டனை கிடைத்தது

(வவனியா)

ரிக்கற் இன்றி பஸ் பிரயாணம் செய்தவருக்கு சிறைத் தண்டனை கிடைத்தது. நாயாறு முல்லைத்திவு பஸ்சில் ரிக்கற் இன்றி பிரயாணம் செய்த பிரஸ்தாப நபரை வவனியா டிப்போவைச் சேர்ந்த திடீர்பரிசோதனைக் குழுவினர் வவனியாவில் வைத்து கண்டுபிடித்து வவனியா பொலிசில் ஒப்படைத்தனர். வழக்கை விசாரணை செய்த மாவட்ட நீதவான் திரு. ஜி. என் வீரரத்தின சிறைத்தண்டனை விதித்து நீர்ப்பளித்தார் (உ)

# அருணோதயாவுக்கு

# புலமைப்பரிசில் நன்கொடை

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப் பட்டுச் செல்லவிருக்கும் திறமையான விஞ்ஞான மாணவருக்கு விசேஷ புலமைப் பரிசில் திட்ட மொன்று வழங்கப்படவுள்ளது.

தற்போது மலேசியா நாட்டில் வசித்து வருபவர்களான திரு. சின்னப்பு தம்பதிகள் இந்த விசேஷ புலமைப் பரிசிலை வழங்கியுள்ளார்கள். இத்தகையதொரு புலமைப்பரிசில் திட்டம் யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக அளவெட்டி அருணோதயக் கல்லூரியில்தான் அமுல் நடத்தப்படவிருக்கிறதாம்.

இதைவிட இக் கல்லூரியின் சகல வகுப்புகளுக்கும் பொதுவான பல்வேறு புலமைப் பரிசில்களையும் சின்னப்பு தம்பதிகள் வழங்கியிருக்கின்றனர்,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அருணுசல உடையார், யோக சுவாமிகள், ஔவையார், திருவள்ளுவர், இலட்சிய புதுமைப் பெண் ஆகிய ஞாபகார்த்தப் போட்டிகள் மாணவர்களிடையே நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்குவதற்கும் இப் புலமைப் பரிசில் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர இக்கல்லூரியின் முன்னுள் ஆசிரியர் ஒருவர் சேர். பி. இராமநாதன் நினைவாக புலமைப்பரிசில் திட்டமொன்றையும் வழங்கியிருக்கின்ருர்.

கல்வி முன்னேற்றத்திற்கு இத்தகைய புலமைப்பரிசில்கள் உதவியிருக்குமென இக்கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (அ)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

யாழ் திருவண்ணைநகர் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா இன்று காலை 9-30 மணியளவில நடைபெறவிருக்கிறது,

மேற்படி பாலஸ்தாபன கிரியைகள் நேற்று மாலை ஆரம்பமாயின முதலில் எம்பெருமாணுகிய கதிர்வேலாயுதஸ்வாமியிடம் பாலஸ்தாபனத்திற்கான. அநுமதிபெறப்பட்டு, தொடர்ந்து கணபதிஹோமம் நவக்கிரகசாந்தி,வாஸ்துசாந்தி முதலியன நடைபெற்று முருகப்பெருமான் கும்பத்தில் ஆவாஹிக்கப்பெற்று யாக பூஜை, ஹோமங்கள் நடந்தேறின.

இன்று காலை 7 மணி தொடங்கி யாகபூஜை, ஹோமம் பூர்ணுகுதி நடைபெற்று வேததேவார ஸ்தோத்திர பாராயணங்களோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறஇருக்கிறது.

மேற்படி கிரியைகளை திருக்கேதீஸ்வரம் பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியபட்டர் இனுவில் தர்மசாஸ்தாகுல அதிபர் தா. மகாதேவசர்மா அனுசரணையோடு நடாத்திவைப்பார்கள்,

புதிய தேவஸ்தான அறங்காவல் குழுவின் முதல் முயற்சியாக இவ்வைபவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# மருத்துவபீடங்களில் விரிவுரையாளர் பற்றுக்குறை

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு, பேராதனை வளாகங்களில் உள்ள மருத்துவ பீடங்களில் விரிவுரையாளர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாக கொழும்புவளாக மருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் எஸ். ஆர். கொட்டகொட தெரிவித்துள்ளார்.

றுகுண வளாகத்திலும், யாழ். வளாகத்திலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவ பீடங்களுக்கு விரிவுரையாளர்கள் போதாத நிலையே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளையில் தற்போது றுகுணுவளாக மருத்துவ பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 40 பேரை கொழும்பு வளாகத்திற்கும் 35 பேர் பேராதனை வளாகத்திற்கும் அனுப்பப்பட உள்ளனர். இவர்கள் முதல் இரண்டு ஆண்டுகளுக்கும் இவ்வளாகங்களில் கல்வி கற்றபின்னர் றுகுணு வளாகத்திற்கு அனுப்பப்படுவர், (இ)

# இவர்களையும் பொலிஸ் விசாரிக்கிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கமத்தொழில் வங்கியில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் மோசடி ஒன்றைத் தொடர்ந்து வெங்காயக் கடன் எடுத்து வைப்புக் கணக்கில் அதிகமான தொகையை வைப்புச்செய்துள்ளவர்களின் வீடுதேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளதாகத் தெரிகிறது. இதனுல் கடன் எடுத்த பலரும் கிலிகொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## பொலிஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மூலத்தில் தெரிவித்துள்ளார்.

தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, முல்லைத்திவுப் பொலிஸார் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நேற்றுக் காலை விஜயஞ்செய்து காயமடைந்கவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

காயமடைந்தவர் நீர்வேலியில் சோமசுந்தரம் என்பவரின் மகள் ராஜலட்சுமியை விவாகஞ் செய்தவரென்றும், இவருக்கு ஒரு குழந்தை இருப்பதாகவும் கூறப்பட்டது இடதுகாலின் பாதம் கழற்ற வேண்டிய நிலையில் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரம் கூறியது.

## ரயில்களிலும்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தயாராக இருக்கிறதென்றும் மகாநாட்டில் தெரிவிககபபட்டது.

இன்று முதல், யாழ். மாவட்டத்தில் ஆயுதந் தாங்கிய பொலிஸார ரோந்துக் காவலில் ஈடுபடுவார்கள். இத்துடன் இரகசியப் பொலிஸாரும் பல இடஙகளிலும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுவர்.

அரசாங்கச் செயலக மகாநாட்டின்பின், யாழ்.பொலிஸ் நிலையத்திலும் ஒரு மகாநாடு நடைபெறறது. இம்மகாநாட்டில், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும. உயர் பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இம்மகாநாட்டில், பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதில் பொலிஸார் நடந்துகொள்ளவேண்டிய நடைமுறை பற்றி விளக்கிக் கூறினுர். அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய எந்த ஒரு சம்பவத்துக்கும் பொலிஸார் காரணமாக இருக்கக் கூடாதென்றும் அவர் கூறினுர்,

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu, Telephone 389. Registred as a Newspaper in Srilanka.